# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 65 /2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 | நாள் | 30.08.2024 |
| பெயர் | சின்னாயாள் | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி Recall செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கு சம்பவத்திற்கு முன்பு எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வருவார்கள் என்றாலும் நாங்களும் அவர்களும் சுமூகமான உறவு முறையில் இருந்தோம் என்றால் சரியல்ல. 2 வது எதிரி சரவணன் சண்டைக்கு முன்பு எங்கள் வீட்டில் வந்து சாப்பிடுவார் என்றால் சரியல்ல. எங்கள் நாத்தனாருக்கும் எங்களுக்கும் எந்த சண்டையும் இல்லை. என் நாத்தனார் கணவருக்கும் எங்களுக்கும்தான் பிரச்சனை. இந்த வழக்கும் சம்பவத்திற்கு முன்பு எங்கள் குடும்பமும் எதிரிகள் குடும்பமும் சுமூகமான உறவில் இருந்தோம் என்றாலும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு முதல் நாள் 1 வது எதிரியை எனது மகன் நிவாஸ் அடித்து விட்டான் என்றால் சரியல்ல. ஏன் சக்கரவர்த்தியை அடித்தாய் என்று என் கணவர் நிவாஸை கேட்டார் என்றால் சரியல்ல. என் கணவரையும் எனது மகன்களையும் எதிரிகள் தாக்கியதாக சொல்லும்போது நான் எங்கிருந்தேன் என்றால் மாடி வீட்டில்தான் பேசிக்கொண்டிருந்தோம். எதிரி சரவணன் என் கணவரை எந்த இடத்தில் வெட்டினார் என்றால் தலையில்தான் வெட்டினார். இந்த சம்பவத்தில் யார் யாரை முதலில் அடித்தார்கள் என்றால் எதிரிகள் நாலு பேரும் தான் சண்டைபோட்டார்கள். அப்போது என் மகன்கள் நிலத்தில் இருந்தார்கள். அங்கிருந்து ஓடிவந்தார்கள்.

என்னை செங்கலால் அடித்தார்கள் என்ற விவரத்தை போலிசாரிடம் சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். கையெழுத்து எதுவும் போட்டேனா என்றால் போட்டேன். எனக்கு சம்பவத்தில் ஏற்பட்ட காயத்திற்கு எங்கு சிகிச்சை பெற்றேன் என்றால் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். தனியார் மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதற்கு ஆவணங்கள் வைத்திருக்கிறேனா என்றால் வைத்திருக்கிறேன். வீட்டில் பார்த்தால் தான் தெரியும். போலிசாரிடம் ஒப்படைக்கவில்லை. அந்த மருத்துவமனை பெயர் என்ன என்றால் தெரியவில்லை. என் மருமகள் அனுசுயாவிற்கு அடிபட்டதா என்றால் ஆமாம். அவர் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் தெரியவில்லை. நான் பழைய வீட்டில் இருந்ததாகவும் சத்தம் கேட்டு புது வீட்டிற்கு ஓடி போய் பார்த்தாக சொல்லியிருப்பது சரியா என்றால் சரி. எதிரிகள் கம்பியாலும் பைப்பாலும் அடித்தார்கள். என் கணவரை கத்தியால் வெட்டினார்கள். அது எவ்வளவு பெரிய கம்பி என்றால் சாட்சி இரண்டு கைகளையும் விரித்து அவ்வளவு பெரிய கம்பி என்று கூறுகிறார். அது கோர்ட்டில் உள்ளது என்று கூறுகிறார். எதிரிகள் எந்த இடத்தில் வண்டியை நிறுத்தினார்கள் எ்னறால் எங்கள் வீட்டு வாசலில் தான் நிறுத்தினார்கள். இரண்டு வண்டியையும் எடுத்து போய் விட்டார்களா என்றால் ஒரு வண்டியை வெட்டியவரும் மற்றொருவரும் எடுத்து போய் விட்டார்கள். மற்றொரு வண்டியை விட்டு போய் விட்டார்கள். நாங்கள் அந்த வண்டியை உடைத்து விட்டோம். இரண்டு வண்டியில் எதிரிகள் வந்ததாக சொல்வது பொய் என்றாலும் 1 வது சக்கரவர்த்தி மட்டும் எங்கள் வீட்டிற்கு எனது கணவரிடம் முதல் நாள் நிவாஸ் தன்னை அடித்தது பற்றி சொல்ல வந்தார் என்றாலும் அந்த வண்டியை தான் நாங்கள் அடித்து உடைத்து விட்டோம் என்றால் சரியல்ல. மற்ற எதிரிகள் அவருடன் வரவில்லை என்றால் சரியல்ல. அனுசுயா, சுபா ஆகியோர் என் கணவர் அடிப்பட்டு விழுந்த சத்தம் கேட்டபிறகு வந்தார்கள் என்றால் சரி. எதிரிகளும் எங்கள் குடும்பத்திற்கும் எந்த மனஸ்தாபமும் இல்லை என்றாலும் 1 வது எதிரிக்கும் என் மகன் நிவாஸ்க்கும் தான் பிரச்சனை என்றால் சரியல்ல. லதாவின் நிலத்தையும் எதிரிகள் நிலத்தையும் நாங்கள் ஓட்ட கேட்டு அவர்கள் மறுத்ததால் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் கணவர் என் மகனை ஏன் 1 வது எதிரியை அடித்தாய் என்று கேட்டதால் என் மகன்களும் என் கணவருக்கும் ஏற்பட்ட பிரச்சனையால் என் கணவருக்கு காயம் ஏற்பட்டது என்றால் தவறு. சண்டை எவ்வளவு நேரம் நடந்தது என்றால் வாய்வார்த்தையாக

சண்டை எதுவும்நடக்கவில்லை. வந்தவுடன் அடித்தார்கள், வெட்டினார்கள். அதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் என் மகன்கள் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தாரகள். அப்போது இப்பொழுது சொன்னதைதான் சொன்னேனா என்றால் ஆமாம். கையெழுத்து எதுவும் போட்டுக்கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு கையெழுத்து போட தெரியாது. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல.